இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 30.01.2026

# சிறப்புத் திட்டங்கள் பட்டியல் போட முடியுமா?

தமிழ்நாட்டுக்கு வரும்போது பிரதமர் மோடி என்ன செய்திருக்க வேண்டும்? தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. ஆட்சி செய்த சிறப்புத் திட்டங்களின் பட்டியலை ஃபைல் போட்டு எடுத்து வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் என்றால் என்னவென்றே தெரியாது.

ஒன்றிய அரசின் ஆட்சியில் கூட்டணியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த போது செய்யப்பட்ட சாதனைகள் சில...

- ★ **இந்திய அரசு செலவு செய்த திட்டச் செலவில் 11 விழுக்காட்டை தமிழகத்துக்கு கொண்டு வந்தோம்.**
- ★ **மிக முக்கியமான 69 திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் காட்டினோம்.**
- ★ **இரண்டாயிரம் ஆண்டு இலக்கியப் பெருமை கொண்ட தமிழ்மொழியை செம்மொழியாக்கும் பெருங்கனவு 100 ஆண்டுகளாக நம் தமிழறிஞர்களுக்கு இருந்தது. செம்மொழித் தகுதியை தமிழுக்குப் பெற்றுத் தந்தோம்.**
- ★ **செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை அமைத்தோம்.**
- ★ **கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய்ச் செலவில் திட்டப்பணிகள் செய்யப்பட்டன.**
- ★ **ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம் அமைந்தது.**
- ★ **1553 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் உருக்காலை சர்வதேச அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருக்காலை உருவாக்கம்.**
- ★ **தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.**
- ★ **சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம்.**
- ★ **120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமார மங்கலம் மருத்துவமனை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மேம்பாடு.**
- ★ **1,650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே பறக்கும் சாலைக்கான துவக்கம்.**
- ★ **2,427 கோடி ரூபாய்ச் செலவில் சேது சமுத்திரத் திட்டப்பணிகள் தொடக்கம்.**
- ★ **நெசவுத் தொழிலுக்கு இருந்த சென்வாட் வரி நீக்கம்.**
- ★ **908 கோடி ரூபாய்ச் செலவில் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.**
- ★ **அடக்குமுறை பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டது.**
- ★ **தமிழகத்திலுள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி.**
- ★ **1,828 கோடி ரூபாய்ச் செலவில் 90 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி.**
- ★ **சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.**
- ★ **ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**
- ★ **திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.**
- ★ **சென்னைக்கருகில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல்சார் தேசிய பல்கலைக் கழகம்.**
- ★ **திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம்.**
- ★ **கிண்டி கத்திபாரா, கோயம்பேடு, பாடி போன்ற இடங்களில் உள்ள மிகப்பெரிய மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் போன்றவை இந்த காலகட்டத்தில் உருவாகின.**
- ★ **கரூர், ஈரோடு & சேலம் ஆகிய மூன்று இடங்களில் சுமார் நானூறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தொழில்நுட்ப ஜவுளி பூங்கா.**

- ஆகியவை அனைத்தும் ஒன்றிய அரசின் கூட்டணியில் இடம் பெற்று, தமிழ்நாட்டுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த திட்டங்கள் ஆகும். சாதனைகள் ஆகும். தமிழ்நாட்டுக்காகக் கிடைத்த தனிப்பட்ட சிறப்புத் திட்டங்கள் ஆகும்.

அப்படி சிறப்புத் திட்டங்கள் இருந்தால், அதனை பிரதமர் மோடி அவர்கள் சொல்லி இருக்க வேண்டும். இல்லை. அதனால் சொல்லவில்லை.

மதுரையில் பிரமாண்டமான எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்திருந்தால் சொல்லலாம். அதைக் கட்டவில்லை. ஓசூருக்கு விமான நிலைய அனுமதி கொடுத்திருந்தால் சொல்லலாம். அந்த அனுமதி தரவில்லை. மதுரைக்கு மெட்ரோ ரயில் விட அனுமதித்திருந்தால் சொல்லலாம். அந்த அனுமதியும் தரவில்லை. கோவைக்கு மெட்ரோ ரயில் விட அனுமதித்திருந்தால் சொல்லலாம். அந்த அனுமதியும் தரவில்லை. மோடியின் கைவசம் சொல்வதற்கு ஏதுமில்லை. அதனால் அவரால் சொல்ல முடியவில்லை.

தமிழ் செம்மொழியானது. செம்மொழி உயராய்வு நிறுவனம் அமைக்கப்பட்டது. காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. காவிரி கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. மாநில முதல் அமைச்சர்கள் விடுதலை நாளான ஆகஸ்ட் 15ல் கோட்டையில் தேசியக் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தார். வி.பி.சிங் தலைமையில் நடந்த தேசிய முன்னணி ஆட்சியின் போது முதல்வர் கலைஞரின் வற்புறுத்தலால் மண்டல் கமிஷன் அறிக்கையை அரசு ஏற்று மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. சேது சமுத்திரத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்திய அமைதிப்படை திரும்பப் பெறப்பட்டது. தேசிய சித்தமருத்துவ ஆய்வு மையம் உருவாக்கப்பட்டது. ... என்று அடுக்கிக் கொண்டே போகிறோம். அப்படி ஏதாவது அடுக்க முடியுமா பா.ஜ.க. ஆட்சியில் இந்த பத்தாண்டுகளாக?

- ★ **இந்தி திணிப்பு**
- ★ **சமஸ்கிருத திணிப்பு**
- ★ **தமிழ் புறக்கணிப்பு**
- ★ **நீட் கொடுமை**
- ★ **மூன்று வேளாண் சட்டங்களின் மூலமாக விவசாயிகளின் வாழ்க்கை பறிப்பு**
- ★ **குடியுரிமை திருத்தச் சட்டத்தின் மூலமாக சிறுபான்மையினருக்கு அச்சம்**
- ★ **மாநில உரிமைகள் பறிப்பு**
- ★ **நிதி உதவிகள் மறுப்பு**
- ★ **ஜி.எஸ்.டி. நிதி மறுப்பு**
- ★ **பேரிடர் கால நிதி தர மறுப்பு இவைதான் பா.ஜ.க. கால வேதனைகள். இதனைத்தான் பட்டியல் போட முடியும்!**

## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பெரம்பூரில் நவீன

# அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன.30-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.01.2026) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர் நெடுஞ்சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை" திறந்து வைத்து, 10 இணைகளுக்கு திருமணத்தை நடத்திவைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.**

**அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை திறப்பு**

பெரம்பூர் நெடுஞ்சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் மிகப்பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை" முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சிறப்புமிக்க திருமண மாளிகையை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ளும் வகையிலும், குறிப்பாக திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மங்களபுரம், ஏகாங்கிபுரம், ஆதிசேஷன் நகர், சாஸ்திரி நகர், பிஸ்லின் நகர், ஜோதி நகர், சேமாத்தம்மன் நகர் ஆகிய பகுதி மக்கள் தங்களது இல்லத் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில், அதிக வசதிமிக்க இம்மண்டபத்தில் மனமகிழ்வுடன் நிறைவாக நடத்திடும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கொண்ட 30,000 சதுரடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் தரைத்தளத்தில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் மற்றும் சமையலறை கூடமும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 175 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடமும், இரண்டாவது தளத்தில் 570 இருக்கைகளுடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம், மணமகன் மற்றும் மணமகள் அறைகளும், மூன்றாம் தளத்தில் 4 எண்ணிக்கையிலான விருந்தினர் அறைகள், மின்தூக்கி வசதிகள், நவீன கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இத்திருமண மாளிகை கட்டப்பட்டுள்ளது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் 10 இணைகளுக்கு மணவிழாவை நடத்தி வைத்தார்!**

இப்புதிய அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் முதலமைச்சர் அவர்கள் 10 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை திருவான்மியூரில் காயத்ரி ஸ்ரீதர் இல்லத் திருமணம்!

## ஸ்ரீ சாத்விகா – சாகித்யன் திருமணத்தை நடத்திவைத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்!

**சென்னை, ஜன.30-**

**சென்னை திருவான்மியூரில், திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய அணித் தலைவரும், பூந்தமல்லி நகர மன்றத் துணைத் தலைவருமான ஸ்ரீதர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் காயத்ரி ஸ்ரீதர் ஆகியோரின் மகள் ஸ்ரீசாத்விகா, விஜயகுமார் - ரேணுகாதேவி இணையரின் மகன் சாகித்யன் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

இன்றைக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய அணித் தலைவரும், பூந்தமல்லி நகரமன்றத் துணைத் தலைவருமான அண்ணன் ஸ்ரீதர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் சகோதரி காயத்ரி ஸ்ரீதர் ஆகியோரின் அன்பு மகள் ஸ்ரீ சாத்விகாவுக்கும், விஜயகுமார் - ரேணுகாதேவி இணையரின் மகன் சாகித்தியனுக்கும் நடைபெறுகின்ற திருமண விழாவில் உங்களோடு சேர்ந்து பங்கேற்று, இந்தத் திருமண விழாவை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நேற்று மாலை திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தி இருக்கிறார்கள். இன்றைக்கு நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

### பாரம்பரியமிக்க குடும்பம்!

முழுக்க முழுக்க நம்முடைய கொள்கைக் குடும்பத்திலே நடைபெறுகின்ற ஒரு திருமண விழா. சகோதரி காயத்ரி ஸ்ரீதர் அவர்களின் குடும்பம் பாரம்பரியமிக்க கழகத்தின் குடும்பம். கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்ற போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பொழுது, சகோதரி காயத்ரி அவர்களின் தாத்தா கோபாலன் அவர்கள் குன்றத்தூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே பெருமைக்குரிய இந்தக் குடும்பத் திருமணத்தை நடத்தி வைப்பதில் எனக்குக் கூடுதல் பெருமை.

இவர்களின் குடும்பத் திருமண நிகழ்ச்சிகளை நடத்தி வைக்காத திராவிட இயக்கத் தலைவர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இனமானப் பேராசிரியர் அவர்கள், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என இந்தக் குடும்பத்தின் திருமணங்கள் கிட்டத்தட்ட 12 திருமணங்கள் அவர்களின் தலைமையில் நடைபெற்றுள்ளன.

### எனக்குக் கூடுதல் பெருமை!

இன்னும் சொல்லப்போனால், சென்ற ஆண்டு இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அச்சரப்பாக்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மதிவாணன் அவர்களின் மகளின் திருமணத்தையும் நான்தான் நடத்தி வைத்தேன். எனவே இந்தக் குடும்பத்தில் நான் நடத்தி வைக்கின்ற இரண்டாவது சுயமரியாதை திருமண விழா என்று சொல்வதில் எனக்குக் கூடுதல் பெருமை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்து சுயமரியாதை திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரத்தைக் கொடுத்தார்கள். ஆனால் சுயமரியாதை திருமணச் சட்டத்திற்கு, சட்ட அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்பாகவே இந்தக் குடும்பத்தில் சுயமரியாதை திருமணங்கள் நடந்திருக்கின்றன. அதுதான் இந்தக் குடும்பத்தின் கொள்கை உறுதியைக் காட்டுகின்ற ஒரு நிகழ்வு. இரத்தப் பாசம் எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்குக் கழகப் பாசமும் மிக மிக முக்கியம் என்று வாழ்ந்து வருகின்ற இந்தக் குடும்பத்தினருக்கு என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### சுகாதாரத்துறையும் சட்டத்துறையும்!

தன்னுடைய பெற்றோர்கள், முன்னோர்கள் வழியில், சகோதரி காயத்ரி அவர்கள் இன்றைக்கு மிகச் சிறப்பாகக் கழகப் பணிகளைச் செய்து கொண்டு வருகிறார். மண விழா பத்திரிகையைப் படித்துப் பார்த்தேன், மணமகள் ஸ்ரீ சாத்விகா ஒரு மருத்துவர். மணமகன் ஒரு வழக்கறிஞர். மருத்துவராக தங்கை ஸ்ரீ சாத்விகா அவர்கள் மருத்துவ வழக்குகளையும், வழக்கறிஞராகச் சகோதரர் சாகித்தியன் அவர்கள் நீதிமன்ற வழக்குகளையும் தீர்த்து வைக்கின்ற பணிகளில் இருவரும் இனி மேல் சேர்ந்து ஈடுபட வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சுகாதாரத்துறையும் சட்டத்துறையும் இன்றைக்குக் கைகோர்த்து, இணைந்துள்ளன.

இங்கே வந்திருக்கின்ற உங்கள் அனைவரின் சார்பாக மணமக்களை நான் வாழ்த்தி, தமிழ்நாட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளாக நம்முடைய தலைவர் தலைமையில் ஒரு திராவிட மாடல் ஆட்சியை நம்முடைய தலைவர் அவர்கள் நடத்தி வருகிறார்.

நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான இந்த ஆட்சி தொடர வேண்டும். அதற்கு வருகின்ற சட்டமன்றத் தேர்தல் முடிகின்ற வரைக்கும் திருமணத்தில் பங்கேற்று இருக்கின்ற நம்முடைய கழகத்தினர், மணமக்களின் குடும்பத்தினர், பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

கழகத்திற்கு உதயசூரியன் சின்னத்திற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும், களத்தில் உழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, மணமக்களுக்கு ஒரு சிறிய கோரிக்கை. உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தை, அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரு அழகான தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று கூறிக் கொண்டு, உங்கள் அனைவரின் சார்பாக மணமக்களை வாழ்த்தி இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், பூவை ஜெரால்ட், கன்னிகை ஸ்டாலின், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், அன்புவாணன் மேயர் உதயகுமார், நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, பகுதிக் கழகப் பொறுப்பாளர் விநாயக மூர்த்தி, ஒன்றியக் கழகச் செயலாளர் உதயசூரியன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத் துணைச் செயலாளர் கதிரவன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ், லோகேஷ், கிரண் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.